# தேசிய கல்வி நிறுவகம்
# மேலதிக மொழி விருத்தி டிப்ளோமா பாடநெறி 2018
# Diploma in Additional Language Improvement
# சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் கல்வித்துறையினால் நடாத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிப்பதற்குரிய தகைமைகள்**

- க.பொ.த உயர்தரத்தில் குறைந்தபட்சம் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

- அரச பாடசாலை / அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் / பிரிவேனா பாடசாலைகளில் கடமைபுரியும் பரிவேனாதிபதி, ஆசிரியர்கள் / பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் / கோட்டக் கல்வி, வலயக் கல்வி, மாகாண கல்வி திணைக்களங்களில் கடமைபுரிவோர் விண்ணப்பிக்க முடியும்.

**பாடநெறியின் இயல்பு**

- சிங்கள மொழிமூல விண்ணப்பதாரிகளுக்கு தமிழ் கற்கைநெறியும், தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகளுக்கு சிங்கள கற்கைநெறியும் சிங்கள, தமிழ், மொழிமூல விண்ணப்பதாரிகளுக்கு ஆங்கிலக் கற்கைநெறியும் நடாத்தப்படும்.
- இப்பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தோர் அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடாத்தப்படும் அரச கரும மொழிகள் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**பாடநெறியின் காலம்**

- கற்கைநெறியின் காலம் ஒரு வருடம்
- வார இறுதி நாட்களில் நடாத்தப்படும் பகுதிநேர பாடநெறியாகும்.

**பாடநெறிக் கட்டணம்**

- விண்ணப்பிக்கும் கட்டணம் ரூ 500/-, பதிவுக் கட்டணம் ரூ 1000/- பாடநெறிக் கட்டணம் ரூ. 30000/- (இரு தவணைகளில் ரூ 15000/- வீதம் செலுத்தலாம்)
- நிறுவனத்தால் தீர்மானிக்கப்படும் இறுதிப் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயாரித்து அதனுடன் விண்ணப்பக்கட்டணம் 500/=ஐ எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் 607628 எனும் பணிப்பாளர் நாயகத்தின் கணக்கிலக்கத்தில் பணத்தைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியும் சுயவிலாசமிடப்பட்ட ரூபா 15/- முத்திரை ஒட்டப்பட்ட 9''x 4'' அளவுடைய தபால் உறையினையும் இணைத்து 2018.02.15 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **"பணிப்பாளர், ஆசிரியர் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம"** என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும். (காசுக்கட்டளைகள், அல்லது ஏனைய வங்கிகளில் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் Dip in ALIC-2018 என்பதைக் குறிப்பிடுக.

**கலாநிதி (திருமதி)T.A.R.J. குணசேகர**<br>
பணிப்பாளர் நாயகம்,<br>
தேசிய கல்வி நிறுவகம்,<br>
மகரகம.